
# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## புதிய பயிர் ரகங்கள் 2025

| பயிர் ரகங்கள் | எண்ணிக்கை | |
|---|---|---|
| வேளாண் பயிர்கள் | 07 | 19 |
| தோட்டக்கலைப்பயிர்கள் | 12 | |

| வ. எண் | இரகத்தின் பெயர் | பெற்றோர் | வயது | சிறப்பியல்புகள் | |
|---|---|---|---|---|---|
| 1. | நெல் கோ 59 | மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி x அப்போ | 130–135 நாட்கள் | • பருவம்: சம்பா, பின்சம்பா மற்றும் தாளடி<br>• மகசூல்: 5867 கிலோ/எக்டர் (பிபிடி 5204–ஐவிட 15% அதிக மகசூல்)<br>• நடுத்தர குட்டை மற்றும் வறட்சியை தாங்கும் பண்பு<br>• ஆயிரம் நெல் மணிகளின் எடை 14.0 கிராம் (பிபிடி5204 ன் எடை 16 .0 கிராம்)<br>• அதிக அரவைத்திறனும் (65–70%), முழு அரிசி காணும் திறனும் (60–65%) உடையது மற்றும் சிறந்த சமையல் பண்புகளைக் கொண்டது<br>• நடுத்தர அளவில் அமைலோஸ் கொண்டது<br>• வெண்முதுகுதத்துப்பூச்சி, இலைச்சுருட்டுப் புழு மற்றும் குலைநோய்க்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது |  |
| 2. | நெல் ஏடிடீ 56 | டபிள்யுஜிஎல் 14377 x எம்டியு 5 | 110–115 நாட்கள் | • பருவம்: கார்/குறுவை/ சொர்ணவாரி/ நவரை<br>• மகசூல்: 6248 கிலோ/எக்டர் (கோ 51 ரகத்தைவிட 10% அதிக விளைச்சல்)<br>• நடுத்தர சன்ன ரக அரிசி<br>• அதிக அரவைத்திறன் (69.5%) மற்றும் முழு அரிசி (64.2%) காணும் திறனுடையது<br>• நடுத்தர அளவில் அமைலோஸ் கொண்டது<br>• குலைநோய், இலை உறைக்கருகல் மற்றும் பாக்டீரியல் இலைக்கருகல் நோய்களுக்கு மிதமான எதிர்ப்புத்திறன்.<br>• இலைச்சுருட்டுப்புழு மற்றும் ஆனைக்கொம்பன் பூச்சிக்கு எதிர்ப்புத்திறனும், புகையான் மற்றும் பச்சைத் |  |

| வ. எண் | இரகத்தின் பெயர் | பெற்றோர் | வயது | சிறப்பியல்புகள் | |
|---|---|---|---|---|---|
| | | | | தத்துப்பூச்சிக்கு மிதமான எதிர்ப்புத்திறனும் உள்ளது | |
| 3. | நெல் ஏடிடீ 60 | ஏடி 01246 x கோ (ஆர்) 49 | 130–135 நாட்கள் | • பருவம்: தாளடி<br>• மகசூல்: 6028 கிலோ/எக்டர் (ஏடிடீ 46 ரகத்தைவிட 13.2% அதிக விளைச்சல்)<br>• நடுத்தர சன்ன ரக அரிசி<br>• நடுத்தர உயரமுடைய (120 செ.மீ) சாயாத தன்மை கொண்ட ரகம்<br>• அதிக அரவைத்திறன் (75%); முழு அரிசி காணும் திறன் (68%)<br>• புகையான், தண்டு துளைப்பான், இலைச்சுருட்டுப்புழு, பாக்டீரியா இலைக்கருகல் மற்றும் குலைநோய், ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது |  |
| 4. | மக்காச்சோளம் கோஎச்(எம்) 12 | யுஎம்ஐ 1220 x யுஎம்ஐ 1210 | 110 நாட்கள் | • பருவம்: மானாவாரி: புரட்டாசிப் பட்டம்<br>இறவை: ஆடி, கார்த்திகை, மார்கழி மற்றும் தைப்பட்டம்<br>• மகசூல்: மானாவாரி: 6511 கிலோ/எக்டர்<br>இறவை : 8128 கிலோ/எக்டர் (கோ 6 மற்றும் என்கே 6240 ரகங்களை விட மானாவாரியில் 11.3% மற்றும் 14.7% அதிக மகசூல்; இறவையில் 9.3% மற்றும் 13.7% அதிக மகசூல்)<br>• மஞ்சள் கலந்த ஆரஞ்சு நிற மணிகளை கொண்ட கதிர்கள்<br>• ஆண் மற்றும் பெண் பூக்கள் ஒரே நேரத்தில் பூப்பதால் வீரிய ஒட்டு விதை உற்பத்தி எளிது<br>• படைப்புழு மற்றும் கரிக்கோல் அழுகல் நோய்க்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது |  |

| வ. எண் | இரகத்தின் பெயர் | பெற்றோர் | வயது | சிறப்பியல்புகள் | |
|---|---|---|---|---|---|
| 5. | உளுந்து விபிஎன் 12 | கேயு 2016 x விபிஎன் 3 | 75–80 நாட்கள் | • பருவம்: இறவை: ஆடி, புரட்டாசி மற்றும் சித்திரை பட்டம்<br>நெல் தரிசு: பின் சம்பா<br>• மகசூல்: இறவை: 859 கிலோ/எக்டர் [வம்பன் 6 –ஐவிட 12% அதிக மகசூல்].<br>நெல் தரிசு : 850 கிலோ/எக்டர் [ஏடீடி 6 மற்றும் ஏடீடி 7 ரகங்களைவிட 22% மற்றும் 18% அதிக மகசூல்]<br>• ஒளி உணராத் திறனுடையது<br>• நீண்ட காய்கள் மற்றும் அதிக விதைகள் கொண்டது<br>• அதிக மாவு பொங்கும் தன்மையுடையது (2.25 லிட்டர் / 500 கிராம் தானியம்)<br>• மஞ்சள் தேமல், இலை நெளிவு மற்றும் சாம்பல் நோய்களுக்கு எதிர்ப்புதிறன் கொண்டது<br>• வெள்ளை ஈ மற்றும் காய் துளைப்பான் பூச்சிகளுக்கு எதிர்ப்புத்திறன் கொண்டது |  |
| 6. | நிலக்கடலை சிடிடீ 1 | (ஐசிஜிவி 92069 x ஐசிஜிவி 93184) எஸ்ஜஎல் 4 x (ஐசிஜிஎஸ் 44 x ஐசிஜிஎஸ் 76) | 120–125 நாட்கள் | • பருவம்: வைகாசிப்பட்டம்<br>• மகசூல்: 2454 கிலோ/எக்டர் (கோ 6 ரகத்தைவிட 20.35% அதிக மகசூல்)<br>• முன் பருவ வறட்சியை தாங்கவல்லது.<br>• எண்ணெய்ச் சத்து (49%) மற்றும் உடைப்புத்திறன் (70.5%)<br>• சுருள் பூச்சிக்கு எதிர்ப்புத்திறனும், இலை சுருட்டு புழு, இலைப்புள்ளி மற்றும் துருநோய்களுக்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது |  |
| 7. | வீரிய ஒட்டு ஆமணக்கு ஒய்ஆர்சிஎச் 3 | டிபிசி 9 x ஜெஜ 220 | 150–170 நாட்கள் | • பருவம்: ஆடி, புரட்டாசி மற்றும் கார்த்திகைப்பட்டம்<br>• மகசூல்: 2014 கிலோ/எக்டர்<br>• நடுத்தர உயரம் மற்றும் கிளைகள் உடையது<br>• குலைகளில் பெண் பூக்களின் அளவு 95 சதவீதத்திற்கு மேல் இருக்கும்<br>• சாயாத செடிகள் மற்றும் காய்கள் வெடிக்காத தன்மை கொண்டது<br>• காவடிப்புழு, புரடீனியா புழு மற்றும் காய்ப்புழுவின் |  |

| வ. எண் | இரகத்தின் பெயர் | பெற்றோர் | வயது | சிறப்பியல்புகள் | |
|---|---|---|---|---|---|
| | | | | தாக்குதலுக்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது<br>• வாடல் நோய்க்கு எதிர்ப்புத்திறன் கொண்டது | |
| 8. | தக்காளி கோ 4 | சி.பி இ.எஸ்.எல் 47 x சி.பி. இ. எஸ். எல் 69 | 160 – 165 நாட்கள் | • பருவம்: ஆடி/ தைப்பட்டம்<br>• மகசூல்: 39.24 டன்/எக்டர் (பிகேஎம் 1–ஐவிட 47.57% அதிகம்)<br>• காம்பின் முனைப்பகுதி மெல்லிய பச்சை நிறம் கொண்டது.<br>• அதிக வைப்பு கால அளவு<br>• தக்காளி இலை சுருட்டு நோய் தாங்கி வளரும் திறன் கொண்டது |  |
| 9. | வீரிய ஒட்டு வெண்டை கோ(எச்) 5 | ஏஇ - சிபிஇ - 92 x ஏஇ - சிபிஇ - 921 | 110 – 120 நாட்கள் | • பருவம்: ஆடி/ தைப்பட்டம்<br>• மகசூல்: 28.85 டன்/எக்டர் (கோ 4–ஐவிட 15.77% அதிக மகசூல்)<br>• விதைத்த 33–36 நாட்களுக்குள் பூக்கும் தன்மை கொண்டது,<br>• விதைத்த 38 நாட்களுக்கு பிறகு சராசரியாக 23 முறை ஒரு பருவத்தில் (120 நாட்கள்) அறுவடை செய்யலாம்<br>• மஞ்சள் நரம்பு தேமல் மற்றும் ஈனேசன் இலைச்சுருட்டு நோய்க்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது |   |
| 10. | மிளகாய் கோ 5 | ஏற்காடு உள்ளூர் ரகத்திலிருந்து தேர்வு | 270 நாட்கள் | • பருவம்: ஆடி, புரட்டாசி மற்றும் தைப்பட்டம்<br>• மகசூல்: 4 டன்/எக்டர் (பைடாகி ரகத்தைவிட 38.3% அதிக மகசூல்)<br>• கேப்சைசின் அளவு (>1.0 லட்சம் Heat units)<br>• தொழில்துறை பயன்பாட்டிற்கு ஏற்றது<br>• இலை சுருட்டை வைரஸ் நோயை தாங்கி வளரும் தன்மை கொண்டது |   |
| 11. | சாம்பல் பூசணி பிஎல்ஆர் 1 | அயன்பணைப் பாக்கம் உள்ளூர் ரகத்திலிருந்து தேர்வு | ஓராண்டு | • பருவம்: அனைத்து பருவங்களுக்கும் ஏற்றது<br>• மகசூல்: 21 டன்/எக்டர்<br>• சிறிய காய்கள் (350 கி / காய்)<br>• சாம்பல் பூசணியின் ஒவ்வாத வாசனையற்றது<br>• குறைந்த விதை எண்ணிக்கை மற்றும் அதிக சதைப்பற்று கொண்டது |   |

| வ. எண் | இரகத்தின் பெயர் | பெற்றோர் | வயது | சிறப்பியல்புகள் | |
|---|---|---|---|---|---|
| | | | | • மாடி தோட்டத்திற்கு ஏற்றது<br>• பழ ஈ, இலை துளைப்பான் மற்றும் சிகப்பு வண்டு தாக்குதலுக்கு மிதமான எதிர்ப்புத் தன்மை கொண்டது | |
| 12. | வாழை காவேரி வாமன் | கிராண்ட் நைன்–ன் சடுதி மாற்றம் | 330–360 நாட்கள் | • பருவம்: ஆடி மற்றும் புரட்டாசிப்பட்டம்<br>• மகசூல்: 60–65 டன்/எக்டர்<br>• இந்தியாவின் முதல் சடுதி மாற்று ரகம்<br>• குட்டை ரகத்தினால் (1.5–1.6m) காற்றின் தாக்கத்திலிருந்து மீள முடியும்<br>• வீட்டுத் தோட்டத்திற்கு ஏற்றது |  |
| 13. | வெண்ணெய் பழம் டிகேடி 2 | டிகேடி பிஏ 82 –லிருந்து தேர்வு | பல்லாண்டு பயிர் | • பருவம்: ஜுன் – செப்டம்பர்<br>• மகசூல்: 129.61 கிலோ / மரம் / வருடம் (51.84 டன்/ எக்டர்)<br>• ஆண்டுதோறும் மகசூல் தரக்கூடியது (480 பழங்கள் / மரம்/வருடம்)<br>• அடர் நடவு முறைக்கு ஏற்றது,<br>• நடுத்தர அளவிலான பழங்கள் (270 கிராம்)<br>• பழத்துளைப்பான், நுண்துளை பழத்துளைப்பான் மற்றும் வாடல் நோய்க்கு மிதமான எதிர்ப்புத் தன்மை |  |
| 14. | எலுமிச்சை எஸ்என்கேஎல் 1 | எஸ்என்கேஎல் 19 –லிருந்து தேர்வு | பல்லாண்டு பயிர் | • பருவம்: ஜுன் – செப்டம்பர்<br>• மகசூல்: 58.20 கிலோ / மரம் / வருடம் (16.60 டன்/ எக்டர்)<br>• வருடம் முழுவதும் சீராக காய்க்கும் தன்மை; ஒரு கொத்தில் ஐந்து பழங்கள் உடையது.<br>• தடிமனான தோல்பகுதி கொண்டதால் தொலைதூர சந்தைக்கு ஏற்றது (வைப்புத்திறன் / 10 நாட்கள்)<br>• அதிக பழச்சாறு (54.1%)<br>• நுனிக்கருகல் நோய், நரம்புத் துளைப்பான் எலுமிச்சை வண்ணத்துப்பூச்சி மற்றும் சிலந்தி தாக்குதலுக்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது |  |

| வ. எண் | இரகத்தின் பெயர் | பெற்றோர் | வயது | சிறப்பியல்புகள் | |
|---|---|---|---|---|---|
| 15. | அரளி தோவாளை 1 | என்ஜ 15 - லிருந்து தேர்வு | பல்லாண்டு பயிர் | • பருவம்: ஜுலை – ஆகஸ்ட்<br>• மகசூல்: 3.87 கிலோ/செடி (9.67 டன்/எக்டர் /வருடம்)<br>• வருடம் முழுவதும் கொத்தாக பூக்கும் தன்மை கொண்டது.<br>• செடிகளில் அதிக நாள் (7 நாட்கள்) இருக்கும் தன்மை கொண்டது<br>• இலைப்புள்ளி நோய் மற்றும் கம்பளிப்புழுவிற்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது |  |
| 16. | தென்னை ஏஎல்ஆர் 4 | மதுசூதனபுரம் உள்ளூர் ரகத்திலிருந்து தேர்வு | பல்லாண்டு பயிர் | • பருவம்: வருடம் முழுவதும்<br>• மகசூல்: வருடத்திற்கு மரம் ஒன்றுக்கு 137 காய்கள் (மேற்கு கடற்கரை நெட்டை: 95–105 காய்கள்)<br>• இளநீர் மற்றும் கொப்பரைக்கு உகந்த நெட்டை ரகம்.<br>• காய் ஒன்றுக்கு 520 மி.லி இளநீர், உரித்த காயின் எடை 650 கிராம்<br>• எண்ணெய் அளவு: 63.12%<br>• தென்னை நார் தொழிற்சாலைக்கு ஏற்றது<br>• ரூகோஸ் சுருள் வெள்ளைப் பூச்சி மற்றும் எரியோ∴பைட் சிலந்திக்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது.<br>• இலைப்புள்ளி மற்றும் இலைக்கருகல் நோய்களுக்கு எதிர்ப்புத்திறன் கொண்டது.<br>• வேர்வாடல் நோயின் தாக்கம் அற்றது |  |
| 17. | ஜாதிக்காய் பிபிஐ 1 | மாறாமலை உள்ளூர் ரகத்தேர்வு | பல்லாண்டு பயிர் | • பருவம்: வருடம் முழுவதும்<br>• ஜாதிபத்திரி மகசூல்: 1.72 கிலோ/மரம் (265.20 கிலோ/எக்டர்)<br>விதை மகசூல்: 7 கிலோ/மரம் (1092 கிலோ/ எக்டர்)<br>• சராசரி காய் எடை: 80.72 கிராம்<br>• ஜாதிக்காய் எண்ணெய்: 7.46–7.7%; ஒலியோரெசின்: 8.56 %<br>• காய் அழுகல் நோய்க்கு மிதமான எதிர்ப்புத்தன்மை கொண்டது |  |

| வ. எண் | இரகத்தின் பெயர் | பெற்றோர் | வயது | சிறப்பியல்புகள் | |
|---|---|---|---|---|---|
| 18. | சிறுகுறிஞ்சான் கோ 1 | ஏற்காடு உள்ளூர் ரகத்திலிருந்து தேர்வு | பல்லாண்டு பயிர் | • பருவம்: ஜூன் – ஜூலை<br>• பசும் இலை மகசூல்: 6.48 கிலோ/கொடி/ ஆண்டு காய்ந்த இலை மகசூல்: 4.54 கிலோ /கொடி/ஆண்டு<br>• ஜிம்நிமாஜெனின் அளவு: 0.72 %<br>• சர்க்கரை நோய்க்கு சிறந்த மருந்தாக பயன்படுகிறது<br>• நவம்பர், டிசம்பர் மாதங்களில் இலை சுருள் புழுக்களின் தாக்குதல் காணப்படும் |   |
| 19. | சிப்பிக்காளான் கேகேஎம் 1 | உள்ளூர் ரகத்திலிருந்து தேர்வு | 30 நாட்கள் | • பருவம்: வருடம் முழுவதும்<br>• மகசூல்: 641.6 கிராம் /படுகை (ஏபிகே 1 மற்றும் எம்டியு 1 ரங்களைவிட 11.66 % மற்றும் 10.65 % அதிக மகசூல்)<br>• அறை வெப்ப நிலையில் இரண்டு நாட்கள் சேமித்து வைக்க முடியும்<br>• குறுகிய காலம் கொண்டதால் பூஞ்சாண நோய்களில் இருந்து விடுப்பு |  |

****